# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

### எழுச்சியுடன் நடைபெற்ற வேலூர் தேர்தல் சிறப்புக் கூட்டம்

அன்பார்ந்த தோழர்களே,

2016, மே மாதம் 10ஆம் தேதி BSNLல் நடைபெற உள்ள 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலையொட்டி வேலூர் தொலைபேசி நிலைய வளாகத்தில் BSNL ஊழியர் சங்கத்தின் தேர்தல் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. BSNL ஊழியர் சங்கத்தின் வேலூர் மாவட்ட தலைவர் தோழர் S.M.சேகர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் மாவட்ட அமைப்பு செயலாளர் தோழர் L.உதயன் வரவேற்றார். BSNL ஊழியர் சங்கத்தின் வேலூர் மாவட்ட செயலாளர் தோழர் C.தங்கவேலு, தலமட்ட கவுன்சில் செயலாளர் தோழர் C.ஞானசேகரன், AIBDPA மாவட்ட செயலாளர் தோழர் B.ஜோதி சுதந்திரநாதன், TNTCWU மாவட்ட செயலாளர் தோழர் P.சதீஷ்குமார் ஆகியோர் உரையாற்றினார். அதன் பின்னர் BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா ஆகியோர் BSNL ஊழியர் சங்கம் இந்த மூன்றாண்டு காலத்தில் செய்த பணிகள் தொடர்பாக சிறப்புரையாற்றினார்கள். இறுதியாக BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, கடந்த காலங்களில் BSNL நிறுவனத்தை பாதுகாக்கவும், ஊழியர்களின் உரிமைகளை வென்றெடுக்கவும், அதற்காக BSNLல் உள்ள அனைத்து சங்கங்களையும் ஒன்று திரட்டுவதிலும் BSNL ஊழியர் சங்கம் எடுத்த நடவடிக்கைகளை மிகச்சிறப்பாக எடுத்துரைத்தார். மேலும், PLI விஷயத்தில் BSNL நிர்வாகத்தோடு NFTE சங்கம் கைகோர்த்து ஊழியர்களுக்கு செய்ய எத்தனித்த துரோகத்தையும், நமது சங்கம் BSNL ஊழியர்களுக்கு நியாயமான PLI பெற்றுத்தருவதற்கு எடுத்து வரும் முயற்சிகளையும் தெளிவாக எடுத்துரைத்தார். எதிர்காலத்தில் BSNLஐ காத்திடவும், 01.01.2017 முதல் நடைபெற உள்ள புதிய ஊதிய மாற்றத்தில் சிறப்பான பங்கினை ஆற்றிடவும், ஊழியர்களின் நலன்களை காத்திடவும் BSNL ஊழியர் சங்கத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்தார்.

BSNL ஊழியர் சங்கத்தின் மாநில பொருளாளர் தோழர் K.சீனிவாசன், சென்னை CGM அலுவலக மாவட்ட தலைவர் தோழர் K.V.சிவகுமரன் மூத்த தோழர் P.மாணிக்க மூர்த்தி உள்ளிட்ட பங்கேற்ற அனைவருக்கும் மாவட்ட பொருளாளர் தோழர் V.பிச்சாண்டி நன்றி கூறி இந்தக் கூட்டத்தை முடித்து வைத்தார். 20 பெண்கள் உட்பட 200க்கும் மேற்பட்ட தோழர்கள் எழுச்சியுடன் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற அனைவரும் BSNL ஊழியர் சங்கத்தினை எதிர் வரும் தேர்தலில் முதன்மை சங்கமாக வர கடுமையாக உழைப்போம் என சூளுரைத்து சென்றனர். ஒரு குறுகிய காலத்தில் மிகச்சிறப்பான் ஏற்பாடுகளை செய்த வேலூர் மாவட்ட சங்கத்தையும் பெருந்திரளாக பங்கேற்றதுடன் கூட்டம் முடியும் வரை பொறுமையாக இருந்து கேட்ட தோழர்கள் மற்றும் தோழியர்கள் அனைவரையும் தமிழ் மாநில சங்கம் மனமார பாராட்டுகிறது.


BSNL ஊழியர் சங்கம்
7வது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல்


BSNL ஊழியர் சங்கம்
BSNLEU
சிறப்புக் கூட்டம்
சிறப்புரை:
அபிமன்யு


BSNL ஊழியர் சங்கம்
7வது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல்
சிறப்புக் கூட்டம்
சிறப்புரை:
P.அபிமன்யு
BSNLEU



